மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினரின் கருத்து பரிசீலிக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த டவுன் பிளானிங் ஆபீசுக்கு முனிசிபாலிட்டியிலிருந்தோ, மற்ற இடங்களிலிருந்தோ, ஏதாவது பிளானிங் சம்பந்தப்பட்ட தீர்மானங்களைப் போட்டு அனுப்பினால் வருஷக் கணக்கிலே ஊறுகாய்ப் பானையிலே போட்ட மாதிரி.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குற்றச்சாட்டெல்லாம் வேண்டாம். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : குற்றச்சாட்டு அல்ல. உடனுக்குடனே அதன் பேரில் ஒன்று 'உண்டு' அல்லது 'இல்லை' என்ற அளவிற்கு எந்த பதிலையும் எதிர்பார்க்க முடியாத அளவுக்கு உள்ளது. இது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? ஆகவே, உடனுக்குடனே துரித நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒரு டவுன் பிளானிங் ஸ்கீமை அப்ரூவ் செய்ய வேண்டுமென்றால், அது பல கட்டங்களைத் தாண்ட வேண்டியிருக்கிறது. அந்தக் கட்டங்களைத் தாண்டுவதற்குக் கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது. ஆனால், நான் பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, கோவை போன்ற இடங்களில் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எந்தத் திட்டத்தில் காலதாமதம் இருக்கிறது என்பதை கனம் உறுப்பினர் குறிப்பாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாக துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : In the matter of promotion in this department, are the Government aware of the fact that when the vacancy of a Deputy Director of Town Planning arose, one who was far junior and who did not deserve promotion, had been promoted in spite of the fact that there were many senior Assistant Directors who deserved promotion on questions of merit ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : This supplementary question does not arise from the main question. My hon. Friend may put a separate question.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தக் கருச்சிதைவுக்கான நவீன சாதனங்களைப் பற்றியோ, மற்றவற்றைப் பற்றியோ இந்திய அரசு மாநில அரசிடம் ஏதேனும் யோசனை கேட்டதா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது, இனி எடுத்துக் கொள்ளப்பட இருக்கிற மூலக் கேள்விக்குரியது.

கரு உறிஞ்சும் குழாய்

*152 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கருச் சிதைவுக்காக உபயோகப்படுத்த புதிதாக ரஷ்யாவில் கண்டுபிடித்துள்ள நவீன 'கரு உறிஞ்சும் குழாய்'. நமது மாநிலத்திற்கு உபயோகப் படுத்தும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இப்பொழுது இல்லை.

(இ) எழாது.

1968 ஆகஸ்ட் 26]

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, இப்பொழுது நடைமுறையில் அனுஷ்டித்து வரக்கூடிய மற்ற சிகிச்சையைவிட இந்த சிகிச்சை மிகவும் இலேசாகவும் எளிதாகவும் இருப்பதாகத் தெரிகிறது. இதில் ஏன் இதுவரையில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவில்லை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினருடைய அனுபவத்தை அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

M.C. Raja Hostel

*54 *Q.*—THIRU G. GOMATHYASANKARA DIKSHIDAR AND THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Harijan Welfare and Information be pleased to state—

(*a*) whether there has been unrest among the inmates of the Government M.C. Raja Hostel, Madras ;

(*b*) if so, the reasons therefor ; and

(*c*) the action taken thereon ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :

(அ) ஆம்.

(இ) சென்னையிலுள்ள அரிசன நலத்துறையைச் சேர்ந்த எம். சி. ராஜா அரசாங்கக் கல்லூரி மாணவர்கள் விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட அரிசி உணவின் அளவு போதாதெனக் கருதினர். நாளொன்றுக்கு அளவிடப்படாத முழு அளவு சாப்பாடு இருவேளைகளிலும் கிடைக்கும் வகையில் தங்களுக்கான அரிசி உணவின் அளவு அதிகரிக்கப்படவேண்டுமென அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

(உ) இம் மாணவர் விடுதிக்கு அனுமதிக்கப்பட்ட உணவுப் பொருளின் பங்கீட்டு அளவு தனிப்பட்ட அடிப்படையில் தக்கவாறு உயர்த்தப் பட்டுள்ளது.

DR. H. V. HANDE : Last year there was a lot of trouble in these hostels because they were not getting good quality of food. Have their views been pointed out ? Has the position changed ? Are the students satisfied now ? Has the administrative set-up been changed in these places ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அவர்கள் கேட்டதற்குப் பிறகு மாறுதல் செய்யப்பட்டு, இரு வேளை அரிசி உணவும் ஒரு வேளை கோதுமை உணவும் தரப்பட்டு வருகிறது. அதில் இதுவரை எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை.

திரு. ஏ. கே. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது, உணவு விஷயமாகச் சில குழப்பம் வந்தது என்று சொன்னார்கள். ஆனால், எங்களுக்கு தந்த தகவல்கள் எல்லாம், ஜன்னலிலே "அண்ணா வாழ்க" என்று எழுதிய காரணத்தால் குழப்பம் வந்தது என்று சொல்லு கிறார்களே, அந்தத தகவல் அமைச்சர் அவர்களுக்கு வந்ததா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்தக் குழப்பம் ஏற்பட்டதற்குக் காரணம், வேறு. உணவுப் பங்கீடு மிகக் குறைவாகயிருக் கிறது என்ற காரணத்தையொட்டித்தான் அவர்கள் கேட்டுக்கொண் டனர். எனவே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்தப் பங்கிட்டினை அதிகமாக்கித் தந்துள்ளார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இப்பொழுது ஏராளமான ஏழை மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்து படிக்க முன்வருகிறார்கள். அப்படி வரக் கூடிய நேரத்தில், ஹாஸ்டலில் இடம் கிடைக்காத காரணத்தினால் மிகவும்